RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-360 | 27 டிசம்பர் | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## சுனாமியால் உயிரிழந்தோரின் 20ம் ஆண்டு நினைவு தினம் மெரினாவில் பொதுமக்களுடன் ஆளுநர் ஆர்.என்.ரவி அஞ்சலி

சென்னை, டிச.27



சுனாமியால் உயிரிழந்தோரின் 20ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, சென்னை மெரினாவில் பொதுமக்களுடன் சேர்ந்து ஆளுநர் ஆர்.என்.ரவி அஞ்சலி செலுத்தினார்.

கடந்த 2004ம் ஆண்டு டிச.26ம் தேதி ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை காரணமாக 14 நாடுகளைச் சேர்ந்த 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். தமிழகத்திலும் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனை நினைவு கூரும் வகையில் ஆண்டுதோறும் சுனாமி பாதிப்புக்குள்ளான இடங்களில் அஞ்சலி செலுத்தப்படுகிறது.

அந்த வகையில் சென்னை மெரினா லூப் சாலையில் தமிழ்நாடு மீனவர் பேரவை சார்பில் சுனாமியால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் பங்கேற்ற ஆளுநர் ஆர்.என்.ரவி, பொதுமக்களுடன் மவுன ஊர்வலத்தில் பங்கேற்றார். தொடர்ந்து அவர் உயிரிழந்தோருக்கு மெழுகுவர்த்தி ஏற்றியும், கடலில் பால் ஊற்றியும் அஞ்சலி செலுத்தினார்.

இதில் தமிழ்நாடு மீனவர் பேரவை தலைவர் இரா. அன்பழகனார், தமாகா பொதுச் செயலாளர் ஜி.ஆர். வெங்கடேஷ், தமிழ்நாடு பிராமணர் சங்கத் தலைவர் என்.நாராயணன், மீனவர் பேரவை செயலர்கள் நாக்ஸ் பெர்னாண்டோ, ஜெயக்குமார், இளைஞரணித் தலைவர் ரஞ்சித், கொள்கை பரப்பு செயலாளர் சித்தார்த்தன், மகளிரணித் தலைவர் ஜெயந்தி சித்தார்த்தன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். ஏராளமான மீனவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் தமிழ்நாடு மீனவர் பேரவைத் தலைவர் இரா.அன்பழகனார் கூறும்போது, "எங்களுடைய சோகம் இன்னும் தீரவில்லை. உலக வரலாற்றில் வயிற்றுப் பிழைப்புக்காக செல்லும் மீனவன் கொல்லப்படும் நிலை தமிழகத்தில் தான் இருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். இதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். எங்களுடைய வாழ்க்கை மேம்படுவதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டும்" என்றார்.

## சரித்திர பதிவேடு குற்றவாளிகளை சும்மாவிடக்கூடாது.. அண்ணா பல்கலை விவகாரத்தில் கனிமொழி எம்.பி., ஆவேசம்!

சென்னை, டிச.27



சென்னை அண்ணா பல்கலைக்கழகம் வளாகத்தில் நேற்று முன் தினம் இரவு மாணவி ஒருவர் பாலியல் வன் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். இரவு 8 மணி அளவில் தனது ஆண் நண்பருடன் பேசிக் கொண்டிருந்த மாணவியை ஞானசேகரன் என்பவர் மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவி கோட்டூர்புரம் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார்.

இதையடுத்துசிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்த போலீசார், கோட்டூர்புரம் பகுதியில் சாலையோரம் பிரியாணி கடை நடத்தி வரும் ஞானசேகரன் என்பவரை கைது செய்தனர். அந்த நபர், சிசிடிவி கேமராக்கள் இருக்கும் பகுதியில் கேப் மற்றும் மாஸ்க் அணிந்து முகத்தை மறைத்தபடி இருந்ததால் அவரது உடையை வைத்து தேடுதல் வேட்டையை ஆரம்பித்தனர் போலீசார்.

பாதிக்கப்பட்ட மாணவியும் அந்த நபர் அணிந்திருந்த உடையை வைத்து மட்டுமே அடையாளம் காட்டினார். இதையடுத்து கைது செய்யப்பட்ட ஞானசேகரன் போலீசாரிடம் இருந்து தப்ப முயன்றார். அப்போது அவர் தடுக்கி விழுந்ததில் அவரது காலில் மாவுக்கட்டு போடப்பட்டுள்ளது. இந்நிலையில் அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்திற்கு திமுக எம்பி கனிமொழி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் பதிவு செய்துள்ள ட்வீட்டில், சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள நிகழ்வு நெஞ்சைப் பதற வைக்கிறது. இதே நபர் நீண்டகாலமாகப் பல மாணவிகளை பாலியல் ரீதியாக அச்சுறுத்தி வரும் சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும் அதிர்ச்சியை அளிக்கிறது. இந்த குற்றவாளிக்கு உடனடியாகக் கடுமையான தண்டனை கிடைப்பதை உறுதி செய்திட வேண்டும்.

பெண்களுக்கெதிரான எந்த வகை குற்றமாக இருப்பினும் அதைப் பொறுத்துக்கொண்டு இருக்காமல், துணிச்சலுடன் வெளிக்கொண்டு வருவதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தித் தருவதும், அனைத்து தளங்களிலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பான வாழ்வை உறுதிசெய்வதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும் என குறிப்பிட்டுள்ளது.

## சென்னையில் டிரைவர் இல்லா மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் துவக்கம்!

சென்னை, டிச.27



சென்னையில் டிரைவர் இல்லாத மெட்ரோ ரயில் திட்டத்திற்கான சோதனை ஓட்டம் நிலையான சோதனைகள் முடிந்து டைனமிக் சோதனை அல்லது சோதனை ஓட்டங்கள் இந்த வார தொடக்கத்தில் துவங்கியதாகவும் 2025 டிசம்பரில் பூந்தமல்லியில் இருந்து போரூருக்கு பயணிகள் போக்குவரத்து துவங்கும் வரை இந்த சோதனைகள் தொடரும் எனவும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் இரண்டு வழித்தடங்களில் 54 கிலோ மீட்டர் தொலைவிற்கு இயக்கப்பட்டு வரும் மெட்ரோ ரயில்களில் தினமும் லட்சக்கணக்கான பயணிகள் பயனடைந்து வரும் நிலையை சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்டத் திட்டத்தில் டிரைவர் இல்லாத மெட்ரோ ரயில்கள் இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த திட்டத்திற்காக 3 ரயில் 70 மெட்ரோ ரயில்கள் தயாரிக்க பிஇஎம்எல் நிறுவனத்திற்கு ரூபாய் 3657.53 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.

**சோதனை ஓட்டம் துவக்கம்:**

முன்னதாக டிரைவர் இல்லா மெட்ரோ ரயில் சோதனை ஓட்டத்தை மெட்ரோ ரயில் நிறுவனம் துவங்கியுள்ளது. இதற்காக ஸ்ரீ சிட்டியில் தயாரிக்கப்பட்ட மூன்று பெட்டிகள் கொண்ட டிரைவர் இல்லா ரயில் கடந்த அக்டோபர் மாதம் பூந்தமல்லி டிப்போவிற்கு தனித்தனியாக கொண்டுவரப்பட்டு பின்னர் அவை இணைக்கப்பட்டு முதல் கட்ட சோதனைக்கு அனுப்பப்பட்டது.

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டம் 118.9 கிலோமீட்டர் தொலைவிற்கு செயல்படுத்தப்பட உள்ள நிலையில் இந்த டிரைவர் இல்லா மெட்ரோ ரயில் பூந்தமல்லி போரூர் இடையிலான நான்காவது பாதையில் இயக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரயில்கள் எந்த கோளாறும் இன்றி இயக்கப்படுவதையும் பயணிகளின் செயல்பாடுகளை கையாளும் திறன் கொண்டதாக இருப்பதையும் உறுதி செய்ய சோதனைய ஓட்டங்கள் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியிருப்பதாவது, "நிலையான சோதனைகள் முடிந்த பிறகு டைனமிக் சோதனை மற்றும் சோதனை ஓட்டங்கள் இந்த வாரத்தில் துவங்கியது 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பூந்தமல்லியில் இருந்து போரூருக்கு பயணிகள் போக்குவரத்து துவங்கும் வரை இந்த சோதனைகள் தொடரும்.

இந்த டிரைவர் இல்லாமல் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் மணிக்கோ 10 கிலோமீட்டர் முதல் 40 கிலோ மீட்டர் வரை டெப்போ விலும் 40 கிலோ மீட்டர் முதல் 80 கிலோமீட்டர் வரை பூந்தமல்லியில் இருந்து போரூர் வழியிலான வழித்தடத்திலும் சோதனை செய்யப்பட உள்ளது இதில் பிரேக்கிங் சிஸ்டம் சோதனை செய்யப்படும்" இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

பூந்தமல்லி போரூர் இடையிலான தண்டவாளம் பணிகளை விரைந்து முடித்து மூன்று மாதங்களுக்குள் சோதனை துவங்குவது என்பது சவாலாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 'திமுக கூட்டணி நிரந்தர கூட்டணி' நல்லகண்ணு நூற்றாண்டு விழாவில் ஸ்டாலின் பேச்சு

சென்னை, டிச.27



"திமுக கூட்டணி கொள்கை கூட்டணி மட்டுமல்ல 2026 தேர்தலில் 200+ இடங்களில் வெற்றி பெறப்போகும் நிரந்தரக் கூட்டணி" என்று நல்லகண்ணு நூற்றாண்டு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணுவின் 100வது பிறந்த நாள் மற்றும் கட்சி அமைப்பு நூற்றாண்டு தொடக்க விழா இன்று (டிச.26) கொண்டாடப்படுகிறது.

இந்த விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின், "ஒவ்வொரு ஆண்டும் அய்யா நல்லகண்ணு பிறந்தநாளில் இதே இடத்தில் நாம் கூடி வாழ்த்துவது உண்டு. அந்த அடிப்படையில், இன்றைக்கு கூடியிருக்கின்றோம் என்று சொன்னால், இது அவர் காணக்கூடிய நூற்றாண்டு பிறந்தநாள் விழா.

முத்தரசன் சொன்னதுபோல், பொதுவுடைமை இயக்கத்திற்கும் நூற்றாண்டு, நல்லகண்ணுவுக்கும் நூற்றாண்டு. நம்மைப் பொறுத்தவரையில் இப்படி ஒரு பொருத்தம் யாருக்கும் கிடைத்ததில்லை.

அப்படிப்பட்ட பெரும் வாய்ப்பையும், சிறப்பான வாய்ப்பையும், அரிய வாய்ப்பையும் பெற்றிருக்கக்கூடிய நம்முடைய நல்லகண்ணு அவர்களை நானும் உங்களோடு சேர்ந்து வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளபடியே சொல்ல வேண்டும் என்றால், நான் வாழ்த்த வரவில்லை. வாழ்த்தை பெற வந்திருக்கிறேன். இது தான் உண்மை.

எல்லோருக்கும் எல்லாம் – சமூக நீதி, சமத்துவத்தை நிலைநாட்டிட வேண்டும் என்ற உணர்வோடு, இன்றைக்கு தமிழகத்தில் உங்கள் அன்போடும், ஆதரவோடும் நடைபெற்றுக் கொண்டிருக் கும் திராவிட மாடல் ஆட்சி நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்களுக்கெல்லாம், உறுதுணையாக பக்கபலமாக விளங்கிக் கொண்டிருக்கக் கூடியவர் நம்முடைய அய்யா நல்லகண்ணு.

அமைதியாக, அடக்கமாக அதே நேரத்தில் ஆழமாக எதையும் சிந்தித்து வெளிப்படுத்தக்கூடியவர். அப்படிப்பட்டவரை உங்களோடு சேர்ந்து வாழ்த்துவதில் நான் பெருமைப்படுகிறேன். தொடர்ந்து நீங்கள் இருந்து எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு வழிகாட்டிட வேண்டும், துணை நிற்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு தமிழகத்தில் அமைந்திருக்கக்கூடிய மதச்சார்பற்ற கூட்டணி அமைப்பினுடைய தலைவர்கள் சார்பில் நான் அன்போடு அவரை கேட்டுக் கொண்டு நமது முத்தரசன் பேசுகின்ற போது சொன்னார்; நான் செயற்குழுவில் பேசிய அந்தப் பேச்சை கோடிட்டுக் காட்டி 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று நான் சொன்னதாக எடுத்துச் சொன்னார். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை என்ன என்று கேட்டால், 200 அல்ல, 200யும் தாண்டி வெற்றி பெறும் வகையில் நம்முடைய கூட்டணி அமைந்திருக்கிறது.

7 ஆண்டு காலமாக இந்த கூட்டணி தொடர்ந்து வருகிறது. தேர்தல் களத்தில் நின்று தொடர்ந்து வெற்றியைப் பெற்று வருகிறோம். ஆகவே, இந்த கூட்டணியைப் பொறுத்த வரைக்கும், கொள்கை கூட்டணி மட்டுமல்ல, இது நிரந்தரக் கூட்டணி என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி, அதற்கு நீங்கள் எல்லாம் துணை நிற்க வேண்டும் என்று அன்போடு கேட்டு, உங்கள் அனைவரின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், அய்யா நல்லக்கண்ணு வாழ்ந்து நமக்கு வழிகாட்டிட வேண்டும் என்று கேட்டு, வாழ்க! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்." என்று பேசினார்.

## அண்ணா பல்கலை., மாணவி பாலியல் வன்கொடுமை அதிமுக - பாஜக ஆர்ப்பாட்டம் - சாலை மறியல்

சென்னை, டிச.27



அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தைக் கண்டித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட அதிமுகவினரை போலீஸார் கைது செய்தனர்.

சென்னை: சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன் கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில் அதிமுகவினர் பல்கலைக்கழகம் பிரதான வாயில் முன்பாக சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதைக் கண்டித்து, முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தலைமையில் பல்கலைக் கழகத்தின் பிரதான வாயில் முன்பாக சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட அதிமுகவினரை போலீஸார் கைது செய்தனர். அதைத்தொடர்ந்து, அண்ணா பல்கலைக்கழகம் அமைந்துள்ள சர்தார் படேல் சாலையில், கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நூற்றுக்கும் மேற்பட்ட அதிமுகவினர், அண்ணா பல்கலைக் கழகத்துக்கும், ஆளுநர் மாளிகைக்கும் இடையிலான சாலையை மறைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனால், கிண்டி வழியாக அடையாறு செல்லும் சாலையில் போக்குவரத்து ஸ்தம்பித்தது. முன்னதாக, இன்று காலை முதலே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வந்த அதிமுகவினரை காவல்துறையினர் கைது செய்தனர். ஆர்ப்பாட்டத்தின் போது தமிழக அரசைக் கண்டித்து கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

நடந்தது என்ன? சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரியில் 2ம் ஆண்டு பொறியியல் பயிலும் மாணவி ஒருவர் அங்கு உள்ள விடுதியில் தங்கி உள்ளார். இவருக்கும், 3ம் ஆண்டு மாணவர் ஒருவருக்கும் கடந்த சில மாதங்களாக நட்பு இருந்து வந்துள்ளது. கடந்த 23ம் தேதி இரவு 8 மணி அளவில் இவர்கள் இருவரும் வழக்கம் போல பல்கலைக்கழக வளாகத்தில் நடைபயிற்சி மேற்கொண்டுள்ளனர். கட்டுமான பணி நடந்துவரும் இடத்தின் பின்னால் மறைவான இடத்தில் பேசிக் கொண்டு இருந்துள்ளனர்.

அப்போது, இளைஞர் ஒருவர் மறைவான இடத்தில் இருந்து அவர்களை தனது செல்போனில் வீடியோ எடுத்துள்ளார். பின்னர் அங்கு வந்த அவர், அந்த வீடியோவை காண்பித்து, சமூக வலைதளங்களில் பரப்பி விடுவதாக கூறி அவர்களை மிரட்டியுள்ளார். பின்னர், மாணவரை தாக்கி விரட்டியுள்ளார். பிறகு, மாணவியை பாலியல் வன்கொடுமை செய்துவிட்டு, தப்பியுள்ளார். மாணவியிடம் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டது சென்னை கோட்டூரை சேர்ந்த ஞானசேகரன் (37) என்பது தெரியவந்தது. தலைமறைவாக இருந்த அவரை தனிப்படை போலீஸார் கைது செய்தனர்.

**பாஜக ஆர்ப்பாட்டம்**

அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தைக் கண்டித்தும் மாணவிக்கு நீதி கேட்டும் வள்ளுவர் கோட்டம் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று பாஜக அறிவித்திருந்தது. இந்நிலையில், அப்பகுதியில் ஏராளமான காவல்துறையினர் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டம் காவல்துறையின் தடையை மீறி நடைபெறுவதால், போராட்டத்தில் பங்கேற்க வந்த பாஜகவினரை போலீஸார், கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால், பாஜகவினருக்கும், காவல்துறைக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது போராட்டத்தில் ஈடுபடுவதற்காக, பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் வள்ளுவர் கோட்டம் பகுதிக்கு வந்தார். அவரை தடுத்து நிறுத்திய போலீஸார் அவரை கைது செய்தனர்.

மேலும், இந்த போராட்டத்தில் ஈடுபட வந்த அக்கட்சியின் கரு. நாகராஜன் உள்பட 30க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை போலீஸார் கைது செய்து, அருகில் உள்ள தனியார் மண்டபத்தில் அடைக்கப்பட்டனர். முன்னதாக கைது செய்யப்பட்ட பாஜகவினர், பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி கேட்டும், தமிழக அரசு மற்றும் காவல்துறையக் கண்டித்தும் கண்டன கோஷங்களை எழுப்பினர்.

## ஐஆர்சிடிசி வலைதளம் முடக்கம் தட்கல், இ-டிக்கெட் சேவைகள் பாதிப்பு

சென்னை, டிச.27



இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் டூரிசம் கார்ப்பரேஷனின் (ஐஆர்சிடிசி) வலைதளம் தற்காலிகமாக முடங்கிய காரணத்தால் ரயில் பயணிகள் தட்கல் மற்றும் இடிக்கெட் எடுக்க முடியாமல் தவித்தனர்.

இதனால் அந்த தளத்தை பயன்படுத்த முயன்ற இணையதள பயனர்களுக்கு 'திட்டமிடப்பட்ட பராமரிப்பு பணி காரணமாக இடிக்கெட்டிங் சேவை தற்காலிகமாக பெற முடியாத சூழல் உள்ளது.

மீண்டும் பின்னர் முயற்சிக்கவும்' என்ற மெசேஜ் திரையில் தெரிகிறது. இருப்பினும் இந்த பராமரிப்பு குறித்து ஐஆர்சிடிசி தரப்பில் எந்த அப்டேட்டும் வழங்கப்படவில்லை. அதன் சமூக வலைதள பக்கங்களிலும் இது குறித்த தகவல் தெரிவிக்கப்படவில்லை.

பயணிகள் தங்களது ரயில் டிக்கெட் சார்ந்த சந்தேகங்களுக்கு 14646, 08044647999, 08035734999 ஆகிய கஸ்டமர் கேர் எண்கள் அல்லது etickets@irctc.co.in என்று மின்னஞ்சல் முகவரியை தொடர்பு கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

வலைதள சேவை முடக்கம் குறித்து நிகழ் நேரத்தில் தகவல் தெரிவிக்கும் டவுன் டிடெக்டரில் ஆயிர கணக்கான பயனர்கள் ஐஆர்சிடிசி தளம் முடக்கம் குறித்து தெரிவித்துள்ளனர்.

அதில் 56 சதவீதம் பேர் வலைதளம் முடக்கம் குறித்தும், 30 சதவீதம் பேர் மொபைல் செயலியை பயன்படுத்த முடியவில்லை என்பது குறித்தும், 14 சதவீதம் பேர் டிக்கெட் பதிவு செய்ய முடியவில்லை என்பது குறித்தும் தெரிவித்துள்ளனர்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்கள் ஏலம்

ராமநாதபுரம், டிச.27

ராமநாதபுரம் மாவட்டம் மதுக் கடத்தலில் ஈடுபட்ட வாகனங்கள் பறிமுதல் செய்து தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 14(4)ன் படியும் அரசு ஆணை எண் 39ன் படியும் 84 வாகனங்களை பொது ஏலத்தில் விடுவதற்காக வருகின்ற (30/12/2024)ம் தேதி காலை 10 மணிக்கு இராமநாதபுரம் ஆயுதப்படை வளாகத்தில் நடைபெற உள்ளது.



பொது ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பி1 காவல் நிலைய வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள 84 வாகனங்களை 28/12/2024ம் தேதிக்குள் பார்வையிட்டு முன் பதிவுசெய்து கொள்ளுமாறு மேற் கொள்ளப்படுகிறது பொது ஏலத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் எந்த வாகனத்தை தேர்வு செய்கிறார்களோ அதற்கான முன்பதிவாக பணம் செலுத்த வேண்டும் என்பதையும் ஏலத்தில் எடுக்கப்படும் அனைத்து வாகனங்களுக்கு வாகனத்தின் தொகையுடன் அந்த வாகனத்திற்கு அரசால் விதிக்கப்படும் ஜிஎஸ்டி வரி தனியாக செலுத்தியப் பின்ரே வாகனங்கள் ஒப்படைக்கப்படும் என்று காவல்துறை துணை கண்காணிப்பாளர் தகவல் தெரிவித்துள்ளார்.

## ஒன்றிய -மாநில அரசு பணிகளுக்கான போட்டித்தேர்வுகளுக்கு பயிற்சி ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தகவல்

ராமநாதபுரம், டிச.27

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், மாநில அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் மற்றும் ஒன்றிய அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பித்து தயாராகிவரும் இளைஞர்களுக்காக இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் தன்னார்வ பயிலும் வட்டம் என்ற அமைப்பின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. இதனில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான நூல்கள், மாதாந்திர இதழ்கள் மற்றும்



நாளிதழ்கள் அடங்கிய நூலகம் செயல்பட்டு வருகிறது. இத் தன்னார்வ பயிலும் வட்டம் மூலமாக போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடத்தப் பட்டு வருகிறது. இந்த பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட பலர் போட்டித்தேர்வில் வெற்றி பெற்று இன்று அரசுப் பணியில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வருகின்றனர்.

தற்போது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு தொகுதிஐஏ தேர்விற்கான கட்டணமில்லா நேரடி பயிற்சி வகுப்புகள் இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 27.12.2024 முதல் வார நாட்களில் காலை 10.00 மணி முதல் 01.00 மணி வரை நடைபெற உள்ளது.

இந்த இலவச பயிற்சி வகுப்பில் பங்கேற்க ஆர்வமும், விருப்பமும் உள்ள போட்டித் தேர்வுக்கு தயாராகும் இளைஞர்கள் தங்களது புகைப்படம் மற்றும் சுய விவரங்களுடன் கலந்து கொள்ளலாம்.

இப்பயிற்சி தொடர்பாக இராமநாதபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரிலோ 04567 230160 என்ற எண்ணிலோ அல்லது 7339406320 என்ற அலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு முன் பதிவு செய்து இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங்காலோன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## மதுரை அரிட்டாபட்டி டங்ஸ்டன் சுரங்கம் ஏலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் மக்களை சந்தித்த அன்புமணி

மதுரை டிச:27

மதுரை மாவட்டம் அரிட்டாபட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் ஏலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் பொதுமக்களை பாமக மாநில தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.



தொடர்ந்து மருத்துவர் அன்புமணி ராமதாஸ் பேசியதாவது:

மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்திற்கு உட்பட்ட 50 கிராம விவசாய மக்களின் விரோத டங்ஸ்டன் சுரங்க ஏலத்திற்கு அனுமதி அளித்த மத்திய, மாநில அரசுகளை வன்மையாக கண்டிமப் பதாகவும், வேதாந்தாவின் துணை நிறுவனத்திற்கு வழங்கப் பட்ட ஏலத்தை உடனடியாக ரத்து செய்து மதுரை மாவட்டத்தை பாரம்பரிய பண்பாட்டு மண்டலமாக அறிவிக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் பாமக மாநில பொதுச் செயலாளர் வடிவேல் இராவணன், மாநில பொருளாளர் திலகபாமா, மாவட்ட செயலாளர்கள் சண்முகநாதன், அழகர்சாமி, உள்பட ஏராளமான பாமக நிர்வாகிகளும் பொது மக்களும் கலந்து கொண் டனர்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ் ஆட்சிமொழி சட்டம் வார விழாவையொட்டி விழிப்புணர்வு பேரணி






ராமநாதபுரம், டிச.27

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் தமிழ் ஆட்சிமொழி சட்டம் வார விழாவையொட்டி விழிப்புணர்வுபேரணி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து பங்கேற்றார்கள்.

இப்பேரணியில் சுமார் 300 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தமிழ் ஆட்சி மொழி சட்டம் இயற்றப்பட்ட 27.12.1956 ஆம் நாளை நினைவு கூறும் வகையில் ஒரு வார காலத்திற்கு வார விழா கொண்டாடும் வகையில் வரலாற்று சிறப்புகள் குறித்த விளம்பர பதாகைகள் ஏந்தி பொதுமக்கள் பார்த்து தெரிந்து கொள்ளும் வகையில் நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று பேரணி பேருந்து நிலையம் வந்தடைந்தது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் சபீர்பானு அரசு அலுவலர்கள், சவகர் சிறுவர் மன்ற மாணவர்கள், நாட்டுப்புற கலைஞர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுகா, லத்தேரி பேருந்து நிலையம் அருகில், பாரதிய ஜனதா கட்சியின் கிழக்கு ஒன்றியம் சார்பில் முன்னாள் பாரத பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் 100வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம், ஒன்றிய தலைவர் ஜெயபிரகாஷ் தலைமையில் அவரது திருவுருவபடத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து, பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி விமர்சையாக கொண்டாடப்பட்டது. இதில் ஒன்றிய பொதுச் செயலாளர்கள் சங்கர், திருஞானம், பொருளாளர் வெங்கடேசன், மாவட்ட செயற்கு உறுப்பினர் தேவராஜ் மற்றும் துணைத் தலைவர்கள் நிர்வாகிகள் மற்றும் கிளைத் தலைவர்கள் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## ஷத்திரிய பாசறை காமராஜர் நேதாஜி நல அறக்கட்டளையின் சார்பாக பெருந்தமிழர் கக்கன் ஜி நினைவேந்தல் நிகழ்ச்சி

தாம்பரம் டிச.27

பெருந்தமிழர் தியாகி முன்னாள் காவல்துறை அமைச்சர் கக்கன் ஜி நினை வேந்தல் நிகழ்ச்சி ஷத்திரிய பாசறை மற்றும் காமராஜர் நேதாஜி நல அறக்கட்டளையின் சார்பாக நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் ஷத்திரியபாசறை மற்றும் காமராஜர் நேதாஜி நல அறக்கட்டளை நிறுவன தலைவர் ஆதித்யா சம்பத்குமார் அவர்கள் ஏற்பாட்டில்



முன்னாள் காவல்துறை அமைச்சர் கக்கன் ஜி திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

இதில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகரகாவல் பல்லாவரம் பகுதி போக்குவரத்து காவல் காமராஜர் நேதாஜி சமூக நல அறக் கட்டளையின்கௌரவ ஆலோசகர் சமூகப் நல மணிமாறன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து காவல் துணை ஆய்வாளர் ஜெயவேல், போக்குவரத்து காவலர் சுதாகர், ஆயுதப்படை காவலர் காளிராஜ், தாம்பரம் மாநகர குரோம்பேட்டை காவல் நிலைய குற்றப் பிரிவு காவலர் வசந்தகுமார், குற்றப்பிரிவு காவலர் சாமி கண்னு, ஊர்க்காவல் படை காவலர் குமுதா மற்றும் இளவரசி பொதுமக்கள் கலந்து கொண்டு கக்கன் ஜி திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

## பெரியகுளம் அஇஅதிமுக சார்பில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் நினைவு தினம்

பெரியகுளம் டிச 26

தேனி மாவட்டம் பெரியகுளத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிறுவனரும், மறைந்த முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆர் 37 ஆம் ஆண்டின் நினைவு தின அனுசரிப்பு நிகழ்வு பெரியகுளம் அஇஅதிமுக சார்பில் நகர செய லாளர் பழனியப்பன் தலைமையில் எம்.ஜி.ஆரின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து மௌன அஞ்சலி செலுத்தினர்.



இந்நிகழ்விற்கு பெரியகுளம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அன்ன பிரகாஷ், கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜகுரு, மாவட்ட துணைச் செயலாளர் முத்துலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர அவைத்தலைவர் கோம்பையன், நகர துணைச் செயலாளர் வெங்கடேசன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் சலீம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் துரைப்பாண்டி, மாவட்ட பிரதிநிதி சுரேஷ், விஜய் ஆனந்த் நகர எம் ஜி ஆர் மன்ற செயலாளர் கணேசன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, நகர ஒன்றிய பேரூர் கிளை நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணியினர் மற்றும் தொண்டர்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

## தென்காசியில் ‘‘டாம்ப்கால்’’ நடமாடும் சித்தா ஆயுர்வேதா யுனானி மருந்துகள் விற்பனை நிலையம்






தென்காசி டிச27

தென்காசி மாவட்டம் குற்றாலத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் பயன்படும் விதம் ‘‘டாம்ப்கால்’’ நடமாடும் சித்தா ஆயுர்வேதா யுனானி மருந்துகள் விற்பனை நிலையத்தினை கடந்த (24.122024) அன்று மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது,

பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இந்த நடமாடும் டாப்க்கால் விற்பனை நிலையம் குற்றால அருவிகளின் அருகில் செயல்படும். இதனை பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ள லாம்.

மேலும், தரமற்ற, உரிமம் பெறப்படாத மருந்துகளை பொதுமக்கள் வாங்க வேண்டாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். மேலும் நடமாடும் டாப்க்கால் விற்பனை நிலையம் செயல்பாடு குறித்து பல சிறப்பு அறிவுரைகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஆணையர் (இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி) விஜயலட்சுமி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் உஷா, மருத்துவர்கள் சதீஷ் குமார், மாரியப்பன், பாக்யஸ்ரீ, கிறிஸ்டி, மருந்தாளுநர்கள் நாகராஜன், உஷா, பயிற்சி மருத்துவர்கள் செல்வி.அனுபிரியா, செல்வி.லோகமுத்ரா, மருத்துவமனை பணியாளர் கார்த்திக், மற்றும் அரசு அலுவலலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 3 சதவிகித விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் வணிகவரி மற்றும் பதிவுத் துறையில் பணிபுரிய, பணி நியமன ஆணைகள் பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் 23.12.2024 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து, வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின்போது, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்நீத், வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

## செஸ் போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவிக்கு பாராட்டு

செங்கல்பட்டு டிச27

செங்கல்பட்டு மாவட்டம் ஐக்கிய அரபு நாடான துபாயில் உள்ள ஏலியன்ஸ் நகரில் பெண்களுக்கான ( பிளோ 1700 ) ஏசியன் அமெச்சூர் உமன்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் டிசம்பர் 2024 கான போட்டிகள் நடைபெற்றன

இதில் இந்தியா உட்பட உலகின் 15 நாடுகளை சார்ந்த சுமார் 100 க்கும் மேற்பட்ட செஸ் வீராங்கனைகள் பங்கேற்று விளையாடினர்.

இந்த போட்டியில் இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டை சேர்ந்த செங்கல்பட்டு மாவட்ட வீராங்கனை சனந்தா கலந்து கொண்டு விளையாடினார்.

ராப்பிட், பிளிக்ஸ், கிளாசிகல்



என 3 வகையான பிரிவுகளில் போட்டிகள் சுமார் 10 நாட்கள் நடைபெற்றன.

இந்த 3 வகை போட்டிகளிலும் விளையாடிய சனந்தா அனைத்து போட்டிகளிலும் புள்ளி பட்டியலில் முதலிடம் பிடித்து ஏசியன் உமன்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார். அதோடு 3 தங்க பதக்கங்களை வென்று பண பரிசையும் வென்று சாதனை படைத்தார்.

போட்டிகள் முடிந்து 23.12.2024 அன்று சென்னை வந்த சனந்தாவுக்கு சென்னை விமான நிலையத்தில் செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழகத்தின் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்ட சதுரங்க கழகம் சார்பாக துணை செயலாளர்கள் கிருஷ்ண மூர்த்தி, மாசிலாமணி, பல்லாவரம் தாலுக்கா பொருளாலர் விசாலாட்சி ஆகியோர் சனந்தாவை வரவேற்று தங்களின் வாழ்த்துக்களை தெரிவித்தனர்..

இதுபோன்ற பல வெற்றிகளை மேலும் அவர் பெற்று சாதனைகள் பல படைக்க வேண்டும் என அனைவரும் அவரை வாழ்த்தினர்.




மதுரை மாவட்டம் மதுரை மேற்கு வட்டம் வடபழஞ்சி ஊராட்சியில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 104 பயனாளிகளுக்கு ரூ.22.18 இலட்சம் மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா இ.ஆ.ப.வழங்கினார்.உடன், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், மதுரை வருவாய் கோட்டாட்சியர் ஷாலினி, சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் வேளாண்மை இணை இயக்குனர் சுப்புராஜ் உட்பட பலர் உள்ளனர்.

## அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ், குளம் சிறுவர் பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறப்பு





விழுப்புரம் டிச27

விழுப்புரம் மாவட்டம் வனத்துறை அமைச்சர் க.பொன்முடி அவர்கள், மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி தலைமையில், விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணெய்நல்லூர் பேருராட்சியில், அம்ருத் 2.0 திட்டத்தின்கீழ், அல்லாசாமி குளம் மற்றும் சிறுவர் பூங்காவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு (25.12.2024) திறந்து வைத்தார். உடன் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் கு.ஒம் சிவ சக்திவேல், திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், உட்பட பலர் உள்ளனர்.




வேலூர் மாவட்டம், வேலூர் நகர் அரங்கம் அருகே, வேலூர் மாவட்டத்தில் ஆட்சி மொழி சட்ட வாரம் (18.12.2024 முதல் 27.12.2024 வரை) கொண்டாடப்படுவதை முன்னிட்டு சட்டவாரத்தில் 5ம் நாளான வணிக நிறுவனங்களின் பெயர் பலகைகளை தமிழில் வைக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின்போது வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர், 2வது மண்டல குழு தலைவர் நரேந்திரன். தமிழ்வளர்ச்சி துறை துணை இயக்குநர் ஜெயஜோதி உட்பட பலர் உடனிருந்தனர்.



கன்னியாகுமரி மாவட்டம் அடல்ஜி திடலில் மறைந்த முன்னாள் பாரத பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் 100வது பிறந்த நாள் விழா பாஜகவினரால் கொண்டாடப்பட்டது. இதையொட்டி அவரது உருவப்படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு இனிப்பு வழங்கப்பட்டது. மாவட்ட பாஜக தலைவர் சி.தர்மராஜ், பொதுச்செயலாளர் ஜெகந்நாதன், அகஸ்தீஸ்வரம் ஒன்றிய பார்வையாளர் சி.எஸ்.சுபாஷ், ஒன்றிய தலைவர்கள் பி.அருள்சிவா, அனுஜா சிவா, மாவட்ட தரவு மேலாண்மை பிரிவு செயலாளர் கிருஷ்ண ராஜ், கொட்டாரம் பேரூராட்சி கவுன்சிலர் தங்க குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் அருள்மிகு கள்ளழகர் திருக்கோவிலில் 'நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார். இதனையடுத்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா ஆகியோர் பக்தர்களுக்கு அன்னதான உணவுபரிமாறி, உணவு அருந்தினார்கள்.

## சாட்டையால் அடித்து ஆர்ப்பாட்டம் : அண்ணாமலை அறிவிப்பு

சென்னை, டிச.27

அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தைக் கண்டித்தும் மாணவிக்கு நீதி கேட்டும் வள்ளுவர் கோட்டம் பகுதியில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று பாஜக அறிவித்திருந்தது. இந்நிலையில், அப்பகுதியில் ஏராளமான காவல்துறையினர் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டம் காவல்துறையின் தடையை மீறி நடைபெறுவதால், போராட்டத்தில் பங்கேற்க வந்த பாஜகவினரை போலீஸார், கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால், பாஜகவினருக்கும், காவல்துறைக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது போராட்டத்தில் ஈடுபடுவதற்காக, பாஜக மூத்த தலைவர்



தமிழிசை சவுந்தரராஜன் வள்ளுவர் கோட்டம் பகுதிக்கு வந்தார். அவரை தடுத்து நிறுத்திய போலீஸார் அவரை கைது செய்தனர்.

இந்த நிலையில் செய்தியாளர்களைச் சந்தித்த கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் அண்ணாமலை, நாளை காலை 10 மணிக்கு என்னை நானே சாட்டையால் அடித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

அண்ணா பல்கலை. மாணவி பாலியல் சம்பவத்தை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாகவும், திமுகவை ஆட்சியில் இருந்து அகற்றும் வரை காலில் செருப்பு அணிய மாட்டேன் என்றும் அவர் தெரிவித்தார்.

நாளையில் இருந்து 48 நாட்கள் விரதம் இருக்கப் போகிறேன் என்றும் பிப்ரவரி மாதம் ஆறு படை வீடுகளுக்குச் சென்று முருகனிடம் முறையிடப் போகிறேன் என்றும் தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

# அய்யன் திருவள்ளுவர் சிலை 25ம் ஆண்டு வெள்ளி விழா விழிப்புணர்வு வாகன பிரச்சாரம் மற்றும் கலை நிகழ்ச்சி

## துவக்கி வைத்து முன்னேற்பாடு பணிகள் ஆய்வு செய்த அமைச்சர் தென்னரசு

கன்னியாகுமரி டிச.27

கன்னியாகுமரி மாவட்டம்நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுந்தரவதனம், முன்னிலையில்; நேற்று (26.12.2024) அய்யன் திருவள்ளுவர் சிலை 25ம் ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சி விழிப்புணர்வு வாகன பிரச்சாரம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை துவக்கி வைத்து, முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, தெரிவிக்கையில்:

அய்யன் திருவள்ளுவர் சிலையை முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் தென்குமரி முனையில் நிறுவி 25 ஆண்டுகள் நிறைந்துள்ளது. அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா வருகின்ற டிசம்பர் 30, 31, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற உள்ளது. விழா சிறப்பாக நடைபெறும் வகையில் மிக பிரம்மாண்டமான மேடை அமைக்கப்பட்டு வருகிறது.

முதல்வர் 30ஆம் தேதி மாலை இங்கு வருகை புரிந்து அய்யன் திருவள்ளுவர் சிலையினை பார்வையிட்டு, அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் பாறையினை இணைத்து கட்டப்பட்டுள்ள கண்ணாடி இழைகூண்டு பாலத்தினை திறந்து வைத்து, அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்த உள்ளார்கள். இவ்வாறு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்



தங்கம் தென்னரசு தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தலைமையில், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏ.சுந்தரவதனம், ஆகியோர் முன்னிலையில் மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அதிநவீன மின்னணு வாகன திருவள்ளுவர் கலை பிராச்சார வாகனத்தினை கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள்.

தொடர்ந்து காந்தி நினைவு மண்டபம் வளாகத்தில் சீரமைக்கப்பட்டுள்ள பூங்காவினையும், சுனாமி நினைவு பூங்காவினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அனைத்து பணிகளையும் விரைந்து முடித்திட துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். நெடுஞ்சாலைத் துறை சார்பில் அய்யன் திருவள்ளுவர் சிலையையும் விவேகானந்தர் பாறை இணைக்கும் கண்ணாடி கூண்டு இழை பாலத்தின் தரைத்தளப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

நடைபெற்ற ஆய்வுகளில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், முன்னாள் அமைச்சர் மற்றும் பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் த.மனோ தங்கராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பால சுப்பிரமணியம், ஊரக வளரச்சி முகமை திட்ட இயக்குநர் பாபு, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்யீட; சுகிதா (பொது), செந்தில்வேல் முருகன் (நிலம்)› நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. எஸ்.காளீஸ்வரி, கலை மற்றும் பண்பாட்டுத்துறை உதவி இயக்குநர் கோபால கிருஷ்ணன், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் முருகன், கன்னியாகுமரி பேரூராட்சி செயல் அலுவலர் ராமதேவி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) துவராகாநாத், நெடுஞ்சாலைத்துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, நெடுஞ்சாலைத் துறை உதவி கோட்ட பொறியாளர்கள் ஜெரால்டு ஆண்டனி (நாகர்கோவில்), விஜயா (தக்கலை), வெனிஸ் (தோவாளை), பிரவீன் குமார் (குழித்துறை), உதவி செயற்பொறியாளர்கள் முருகேசன் (கட்டடம் மற்றும் பராமரிப்பு), ராஜலெட்சுமி (மின்னியல்), நாகர்கோவில் மாநகராட்சி உதவி பொறியாளர் ரகுராம், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலாளர் ஆறுமுகம், கன்னியாகுமரி பேரூராட்சி தலைவர் குமரி ஸ்டீபன், துணை தலைவர் ஜெனஸ் மைக்கேல், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய துணை தலைவர் சரவணன், தோவாளை ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் பூதலிங்க பிள்ளை, மாவட்ட இந்துசமய அறநிலையத்துறை அறங்காவலர் குழு தலைவர் (சுசீந்திரம்) பிரபா ஜி.ராமகிருஷ்ணன், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் முருகன், கன்னியாகுமரி துணை காவல் கண்காணிப்பாளர் மகேஷ், மண்டல தலைவர் திரு.ஜவஹர், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக துணை தலைவர் ஜெனஸ் மைக்கேல், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் பிரேமலதா, வட்டார மருத்துவக்குழு உறுப்பினர் பாபு, துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# திருப்பாற்கடலில் மூழ்கி உயிரிழந்த இரண்டு சிறார்களின் குடும்பத்தினருக்கு அரசு மற்றும் சொந்த நிவாரண உதவி வழங்கி ஆறுதல் கூறிய அமைச்சர்

சிவகங்கை டிச27

திருகோஷ்டியூர் கிராமத்தில் திருக்கோவிலின் திருப்பாற்கடலில் குளிக்கச் சென்று எதிர்பாராத விதமாக உயிரிழந்த இரண்டு சிறார்களின் குடும்பத்திற்கு, இறப்பு நிவாரண தொகையாக தலா ரூ.01.00 இலட்சத்திற்கான காசோலையினையும் மற்றும் தனது சொந்த நிதியிலிருந்து ரூ.02.00 இலட்சம் உதவித்தொகையினையும் நேரில் சென்று அமைச்சர் வழங்கி ஆறுதல் கூறினார்.

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், திருக்கோஷ்டியூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சௌமிய நாராயணன் திருக்கோவிலின் திருப்பாற்கடலில் கடந்த (08.12.2024) அன்று திருக்கோஷ்டியூர் கிராமத்தைச் சேர்ந்த ஜெயலெட்சுமி





மகன்கள் விஷ்ணு மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா ஆகிய இரு சிறார்களும் குளிக்கச் சென்ற பொழுது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இவை தொடர்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் இரண்டு சிறார்களின் குடும்பத்தினர்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்து, இறப்பு நிவாரண நிதியாக தலா ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கிட உத்தரவிட்டார்.

அதன்படி, தலா ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலையினை நேற்று (26.12.2024) கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் அவர்கள், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் அவர்களுடன் நேரில் சென்று அச்சிறார்களின் தாயாரிடம் வழங்கியதுடன், தனது சொந்த நிதியிலிருந்தும் ரூ.02.00 இலட்சம் உதவித் தொகையினை நேரில் சென்று வழங்கி, ஆறுதல் கூறினார்.

மேலும், அச்சிறார்களின் தாயாரின் கோரிக்கைக்கிணங்க, அவரின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு தேவையான உதவிகளும் மேற்கொள்ளப்படும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் அக்குடும்பத்தினரிடம் தெரிவித்தார். இந்நிகழ்வின் போது, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) கேசவதாசன், திருப்பத்தூர் வட்டாட்சியர் மாணிக்கவாசகம் உட்பட பலர் உடனிருந்தனர்.

# மதுரையில் ரோட்டரி சங்கம் மற்றும் மடீட்சியா இணைந்து நடத்தும் வாகை வேலைவாய்ப்பு முகாம்

மதுரை : டிச 27

மதுரையில் உள்ள அனைத்து ரோட்டரி சங்கங்களும், மடீட்சியா இணைந்து நடத்தும் வேலைவாய்ப்பு முகாம் வருகின்ற டிசம்பர் 28, 2024 அன்று மடீட்சியா ஹாலில் காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை நடைபெறவுள்ளது.

VaagaiJobFair' ல் 30க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்கின்றன. ஏற்கனவே 500க்கும் மேல் வேலை தேடுவோர் பதிவு செய்துள்ளனர்.

"இந்த வேலை வாய்ப்பு முகாமில் பட்டதாரிகள், டிப்ளோமா, ITI, திறன் பயிற்சி, 10th, 12th படித்து முடித்த மாணவர்கள் ஆகிய அனைவரும் கலந்து கொள்ளலாம். ஏற்கனவே மதுரையை தளமாகக் கொண்ட




30 நிறுவனங்கள், தங்கள் பங்கேற்பை உறுதிப்படுத்தியுள்ளனர். மேலும், சுமார் 1, 500 நபர்கள் வேலைவாய்ப்புக்கு வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம். விண்ணப்பதாரர்களை நேர்காணல் செய்ய நிறுவனங்களுக்கு தனி ஸ்டால்கள் அமைக்கப்பட்டுள்ளது.

2024இல் தேர்ச்சி பெற்றவர்களும் தங்கள் விண்ணப்பத்துடன் பங்கேற்கலாம். ஐடி, கணக்குகள், டிஜிட்டல் மார்க்கெட்டிங், கன்டென்ட் கிரியேட்டர், Architect, இஞ்ஜினியரிங், நர்சிங் போன்ற பல்வேறு வகையான வேலை வாய்ப்புகள் உள்ளன. நிறுவனங்கள் மாத சம்பளம் ரூ.10, 000 முதல் ரூ.40, 000 வரை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர். தேர்வு செயல்முறை மற்றும் நேர்காணலுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மாலைக்குள் செய்யப்பட்டுள்ளது. நியமனக் கடிதம் வழங்கவும் ஏற்பாடு வேலைவாய்ப்பு முகாமில் சிறப்பு விருந்தினராக ரோட்டரி கவர்னர் ராஜா கோவிந்தசாமி கலந்துகொண்டு முகாமை தொடங்கி வைக்கவுள்ளார். மடீட்சியா தலைவர் கோடீஸ்வரன் குத்து விளக்கேற்றவுள்ளார். மேலும் இது போன்ற வேலைவாய்ப்பு முகாமினை வருகின்ற ஜூன் மாதம் திருச்சி, புதுக்கோட்டை, திண்டுக்கல் தேனி, ஆகிய மாவட்டங்களில் நடைபெற உள்ளதுஎனரோட்டரி கவர்னர் ராஜா கோவிந்தசாமி செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.உடன் அசோக், ஆனந்தகுமார், சிவசங்கர், சரண்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெரியகுளம் அருகே தேவதானபட்டியில் அமமுக சார்பில் எம்ஜிஆர் நினைவு நாள் அனுசரிப்பு

தேனி டிச.27

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே உள்ள தேவதானப்பட்டியில் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் 37 வது நினைவு நாளை முன்னிட்டு அவருடைய திருவுருவ சிலைக்கு அம்மா மக்கள் முன்னேற்ற கழக தெற்கு ஒன்றிய செயலாளர் குள்ளப்புரம் கணேசன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ராமசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இந்த நிகழ்ச்சியில் தேனி வடக்கு மாவட்ட அவைத் தலைவர் ராஜேந்திரன், பேரூர் கழகச் செயலாளர் முத்துராஜ் ஒன்றிய மாணவர் அணி செயலாளர் பிரபு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு லிங்கேஸ்வரன், மாவட்ட பிரதிநிதி மாரியப்பன் ஒன்றிய அவைத்தலைவர் பாபு மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மாலை தந்தி

27.12.2024

## வன்னியர்கள் இடஒதுக்கீடு கோரி பல்லாவரத்தில் பாமக - வன்னியர் சங்கத்தினர் பேரணியாய் சென்று ஆர்பாட்டம்

பல்லாவரம் டிச27

பல்லாவரத்தில் வன்னியர்களுக்கான 10.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை தமிழக அரசு உடனே வழங்க வலியுறுத்தியும் அதனை தடுக்கும் நடவடிக்கையை கண்டித்தும் பாமக மற்றும் வன்னியர் சங்கத்தினர் நூற்றுகணக்கானோர் , ஜி.எஸ்.டி சாலையில் பேரணியாய் நடந்து சென்று பேருந்து நிலையம் அம்பேத்கர் சிலை அருகே கண்டன ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளர் வெங்கடேசன் தலைமையில் நடைபெற்ற இதில் மாநில செயற்குழு உறுப்பினர் தாம்பரம் விநாயகம் வழக்கறிஞர் இரா சுரேஷ் தொழிற்சங்கம் முத்துக்குமார் மாவட்ட தலைவர் கருப்பசாமி, மாவட்ட துணை செயலாளர் முனுசாமி, ஐநா. கண்ணன் யி.விசேகர் வன்னியர் சங்கம் மாவட்ட செயலாளர் முரசு ராஜேந்திரன் வன்னியர் சங்க மாவட்ட தலைவர் சம்பத் குமார் தொழிற்சங்கம் மாவட்டச் செயலாளர் பாலாஜி இரும் புலியூர் அர்ஜுனன் வன்னியர் சங்க பாலாஜி செம்பாக்கம் உத்தர குமார் ஜெகன் ராஜசேகர் தணிகாசலம் பூங்காவனம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரை வடபழஞ்சி ஊராட்சியில் நடந்த மக்கள் தொடர்பு முகாமில் 104 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய ஆட்சியர்

மதுரை:டிச 27

மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டம், வடபழஞ்சி ஊராட்சியில் நேற்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதா, இ.ஆ.ப., பல்வேறு அரசுத்துறைகளின் சார்பாக 104 பயனாளிகளுக்கு ரூபாய் 22 இலட்சத்து 18 ஆயிரத்து 233 மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.



தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள. சங்கீதா, பேசியதாவது:

ஒரு நாடு முன்னேற வேண்டும் என்றால் குழந்தைகள் அடிப்படை கல்வி கற்பது அவசியமாகும். 5 முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அடிப்படை கல்வியை கட்டாயமாக்க வேண்டும் என்பதற்காக இந்திய அரசியலைப்பு சட்டத்தில் தனியாக ஒரு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கட்டாய கல்வியை வழங்க வேண்டும். பள்ளி இடைநிற்றல் முற்றிலும் இருத்தல் கூடாது என்ற நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 1ஆம் வகுப்பு முதல் கல்லூரி கல்வி வரை இலவச கல்வி வழங்கப்பட்டு வருகிறது. பள்ளி, கல்லூரி மாணவ. மாணவியர்கள் விடுதிகளின் தங்கி படிக்கும் வகையில் அனைத்து அரசு பள்ளி, கல்லூரிகளில் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித்தலைவர் .மா.செள.சங்கீதாஇ.ஆ.ப., தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ர.சக்திவேல், மதுரை வருவாய் கோட்டாச்சியர் சாலினி, சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் .சங்கீதா, துணை ஆட்சியர் (பயிற்சி) எம்.அனிதா, ஊராட்சி ஒன்றியக் குழு துணைத் தலைவர் இந்திரா ஜெயக்குமார் அவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர் வன்னிச்செல்வி உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட விசாலையங்கோட்டை ஊராட்சியில், மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பு கட்டிடத்தினை திறந்து வைத்த அமைச்சர்



கல்லல் டிச27

சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட விசாலையங்கோட்டை ஊராட்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக்குழு கூட்டமைப்பு கட்டிடத்தினை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், தலைமையில், பயன்பாட்டிற்கு திறந்து வைத்து தெரிவிக்கையில்,


சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 20172018ல் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் கல்லல் ஊராட்சி ஒன்றியத் திற்குட்பட்ட விசாலையன் கோட்டை ஊராட்சியில் மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அப்பணி நிறைவு செய்யப்படாமல் இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் 2021ல் ஆட்சி பொறுப்பேற்ற சமயத்தில் நான் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராக பொறுப்பு வகித்தேன்.

அச்சமயம் இக்கட்டிடத்திற்கான கட்டுமானப் பணியினை நிறைவு செய்திடும் பொருட்டு, ரூ.40.00 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.99.16 இலட்சம் மதிப்பீட்டில் இக்கட்டிடம் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு சிறந்த முறையில் கட்டி முடிக்கப்பட்டு, இன்றையதினம் மகளிர் சுய உதவிக்குழுக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இவ்வூராட்சியில் மட்டும் கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 89 வளர்ச்சி பணிகள் ரூ.04.31 கோடி மதிப்பீட்டில் மேற் கொள்ளப்பட்டு, அதில் 76 பணிகள் நிறைவுபெற்று பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. மீதமுள்ள 13 பணிகள் நடைபெற்று முடிவுரும் தருவாயில் உள்ளது. இதுதவிர, நெடுஞ்சாலைத்துறையின் சார்பிலும் ரூ.08.50 கோடி மதிப்பீட்டில் பாலம் அமைக்கும் பணியும் நிறைவு பெற்று பயன்பாட்டில் உள்ளது.

இதுபோன்று, மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு ஊராட்சி அளவிலும் அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பல்வேறு வளர்ச்சி பணிகள் தொடர்ந்து நகர்ப்புறங்களுக்கு இணையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களின் தேவைகள் அறிந்து, அவர்களை பயன் பெற செய்வதற்கான நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் கூடுதல் தேவைகள் இருப்பின், அத்தேவைகள் அனைத்தும் பொதுமக்களின் கோரிக்கை அடிப்படையில் நிறைவேற்றப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், பொதுமக்கள் தங்களது தேவைகளை அந்தந்த பகுதிக்குட்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வாயிலாக எடுத்துரைத்து, தங்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கும் மற்றும் தங்களது ஊராட்சியின் மேம்பாட்டிற்கும் அடிப்படையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.




மதுரை மாநகரில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்க்கும் மனு கூட்டம் மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் நடைபெற்ற வாராந்திர பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாமில் 15 மனுதாரர்கள் நேரடியாக தங்களது புகார் மனுக்களை காவல் ஆணையரிடம் அளித்தனர்.. பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்த காவல் ஆணையர் உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## விதி முறைகளை மீறி செயல்பட்டு காவலர்களுடன் பள்ளிவாசல் உள்ளே நுழைய கூடாது

### மதுரை தெற்குவாசல் பள்ளிவாசல் நிர்வாக தரப்பு வழக்கறிஞர் பேட்டி

மதுரை: டிச 27

மதுரை தெற்கு வாசல் முகைதீன் ஆண்டவர் தர்கா மற்றும் பள்ளிவாசல். மீனா நூர்தீன் தர்கா பள்ளிவாசல்களில் அலுவலக அறை பூட்டி சீல் வைக்கபட்டுள்ளது எனவும் பள்ளிவாசல் தற்போது வக்பு வாரிய நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதுஎன பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி குறிப்பிட்டனர்.



இதனையடுத்து நீதிபதி இந்த வழக்கு குறித்து வக்பு வாரியத்துக்கு பதில் மனு தாக்கல் செய்ய நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டதோடு , மொஹிதீன் ஆண்டவர் தர்கா மற்றும் பள்ளிவாசல், மின்னா நூர்தீன் தர்கா மற்றும் பள்ளி வாசல், ஏதேனும் விரும்ப தகாத செயல்களில் தனி நபர்கள் ஈடுபட்டால் அவர்கள் மீது தெற்கு வாசல் காவல் துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தர விட்டு வழக்கு விசாரணை ஒத்தி வைத்தார்.

தெற்குவாசல் காவல் துறையினரை கண்டித்தும் பள்ளி வாசல் ஜமாத்தினர் பள்ளிவாசல் மினராவில் (கோபுரம்) ஏறிநின்று நேற்று (புதன்கிழமை) திடீர் போராட்டம் நடத்தினர். இந் நிலையில் இன்று பள்ளி வாசல் நிர்வாகம் தரப்பில் வழக்கறிஞர் செல்வ முருகேஷ் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

மதுரை தெற்கு வாசல் முகைதீன் ஆண்டவர் தர்கா மற்றும் பள்ளிவாசல். மீனா நூர்தீன் தர்கா பள்ளிவாசல்களை பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி வக்பு வாரியம் கையகப் படுத்த கூடாது.

முறைகேடு புகார் குறித்து, வக்பு வாரியம் முறையாக நோட்டீஸ் அனுப்பி, விளக்கம் கேட்டு அதன் பிறகே நிர்வாகத்தை, வக்பு வாரியம் கையகப் படுத்த வேண்டும்.

உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் நிலையில் எந்த நடவடிக்கையும் எடுக்க கூடாது.வக்பு வாரியம் விதி முறைகளை மீறி செயல் பட கூடாது; அத்து மீறி காவலர்களுடன் உள்ளே நுழைய கூடாது, மதுரை தெற்குவாசல் முகைதீன் ஆண்டவர் தர்கா மற்றும் பள்ளிவாசல்.நிர்வாகிகள் தரப்பில் வக்பு வாரியத்தின் சார்பில் பேச்சு வார்த்தை நடத்த தயாராக உள்ளோம். இதற்கு பள்ளி வாசல் நிர்வாகிகள் தரப்பில் குழு அமைத்து உள்ளோம். பேச்சு வார்த்தை நடத்த தயாராக உள்ளோம் என்றார்.

## டிஎன்பிஎஸ்சி (தொகுதி 2 மற்றும் 2ஏ) முதன்மை தேர்வுக்கு நேரடி இலவசப் பயிற்சி வகுப்புகள்

திண்டுக்கல் டிச27

திண்டுக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தன்னார்வப் பயிலும் வட்டம் மூலமாக அரசுப் பணிக்காலியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் வேலைநாடுநர்களுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டிற்கான டிஎன்பிஎஸ்சி (தொகுதி 2 மற்றும் 2ஏ) TNPSC Group-II/IIA தேர்விற்கான அறிவிப்பு 20.06.2024 அன்று வெளியிடப் பட்டது.

இத்தேர்விற்கான முதல் நிலைத் தேர்வு 14.09.2024 அன்று நடத்தி முடிக்கப்பட்டு, தற்போது 12.12.2024 அன்று முதல்நிலைத் தேர்வு முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து TNPSC Group-II/IIA முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு முதன்மை தேர்வுக்கு நேரடி இலவசப் பயிற்சி வகுப்புகள் திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் 03.10.2024 அன்று முதல் துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.



இப்பயிற்சியானது திறன்மிக்க வல்லுநர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. மேலும் மாதிரித் தேர்வுகளும் இலவசமாக நடத்தப்பட உள்ளன.

எனவே, போட்டித் தேர்விற்குத் தயாராகும் மாணவ, மாணவிகள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறு விருப்பமுள்ளவர்கள் இவ்வலுவலகத்தை நேரடியாகத் தொடர்பு கொண்டு தங்களது விவரங்களைப் பதிவு செய்து இப்பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெறலாம், என திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ. நா.பூங்கொடி, தெரிவித்துள்ளார்.

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாலின பாகுபாடு வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம்-கையெழுத்து இயக்கம்

தேனி, டிச.27

தேனிமாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தேசிய அளவிலான பாலினபாகுபாடு வன் முறைக்கு எதிரான விழிப்பு ணர்வு பிராச்சரக் மற்றும் மாபெரும் கையெழுத்து இயக்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். வி .ஷஜீவனா தலைமையில் நடைபெற்றது இந்தக் கூட்டத்தில் குழந்தை திருமணம் போதைப்பொருள் பயன்பாடு மது ஒழிப்பு குடிப் பதைத் தடுத்தல் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன் கொடுமைகள் பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறை பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை அதிகரித்தல் ஆகிய முக்கிய தலைப்புகள் குறித்து அனைத்து துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுடன் விவாதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாலின பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர்.




இதையடுத்து பாலின பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான மாபெரும் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்து முதல் நபராக கையெழுத்திட்டார் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் பாலின பாகுபாடு மற்றும் வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு ரங்கோலி கோலம் மிகச் சிறப்பாக போடப்பட்டிருந்தது இந்த நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் சியாமளா தேனி ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் ராஜராஜேஸ்வரி மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் காமாட்சி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வி சந்தியா உதவி திட்ட அலுவலர் மகளிர் திட்டம் அறிவழகன் மற்றும் சுய உதவி குழு உறுப்பினர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர் இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் இரா நல்லதம்பி செய்திருந்தார்.

## விக்கிரமங்கலம் அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் தற்காலிக ஆசிரியர் பணிக்கு விண்ணப்பம்

சோழவந்தான் டிச 26

மதுரை மாவட்டம் விக்கிரமங்கலம் அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் பற்றா குறையால் மாணவ மாணவிகளின் கல்வி கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் இதனால் தமிழக அரசு உடனடியாக உடனடியாக காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப வேண்டும் என உசிலம்பட்டி சட்டமன்ற உறுப்பினர் அயப்பன் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

மேலும் தமிழக அரசு ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்பும் வரை விக்கிரமங்கலம் கிராமத்தில் இருந்து ஆசிரியர் பணிக்கு விண்ணப்பிக்கும் மாணவ மாணவிகளுக்கு ஆறு மாதங்களுக்கு உரிய சம்பள பணத்தை தன்னுடைய சொந்த நிதியிலிருந்து வழங்குவதாக அறிவித்திருந்தார் இதனை தொடர்ந்து விக்கிரமங்கலம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராம பகுதியில் இருந்து 30க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் தற்காலிக ஆசிரியர் பணிக்கு விண்ணப்பம் வழங்கியுள்ளனர்.



இதுகுறித்து கிராமத்தினர் கூறுகையில் வரும் மார்ச் ஏப்ரல் மாதம் நடைபெற ஆண்டு இறுதித் தேர்வுக்கு தயாராகி வரும் மாணவ மாணவிகளின் கல்வி பாதிக்காத வகையில் தமிழக அரசு உடனடியாக விக்கிரமங்கலம் அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி உள்ள ஆசிரியர் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் இதற்காக கல்வி அமைச்சர் மதுரை மாவட்ட ஆட்சியர் மாவட்ட கல்வி அலுவலர் ஆகியோர் பள்ளியில் நேரில் ஆய்வு செய்து எந்தெந்த ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளது என ஆய்வு மேற்கொண்டு அந்த பணியிடங்களுக்கு தேவையான ஆசிரியர்களை உடனடியாக நியமிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

மேலும் அதுவரை விக்கிரமங்கலம் கிராமத்தின் சார்பாக தற்காலிக ஆசிரியர்களை பள்ளி நிர்வாகத்தின் மூலம் நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து சட்டமன்ற உறுப்பினர் ஐயப்பனுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறைப்படி தற்காலிக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டவுடன் அவர்களுக்கான சம்பளத்தை வழங்குவதற்கு எம்எல்ஏவிடம் கோரிக்கை மனு வழங்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161